# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2017–ம் வருடம் மார்ச் மாதம் 28 –ம் தேதி புதன் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விவரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## <u>பொருட்கள்</u>

1) இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN 74W-0436-க்கு பழுது பணிகள் மேற்கொள்ள 16–02–2018 அன்று மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | A.R.K. ஆட்டோ மொபைல்ஸ் நாகர்கோவில் | 37900/– |
| 2. | K.S.S.S. ஆட்டோ மொபைல்ஸ் நாகர்கோவில் | 38100/– |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரிசை எண்.1–ல் உள்ள A.R.K ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த A.R.K. ஆட்டோ மொபைல்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண். 2897/2017/அ2)

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1203</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

2) பத்மனாபபுரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண். TN75B4577 TATA ACE வாகனத்தின் பேட்டரி (மின் கலப் பெட்டி) பழுதாகி விட்டதால் புதிய மின் கலபெட்டி விலைப்புள்ளிகள் பெற்று வாங்குவதற்கும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.5100/–க்கும் செலவு தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் பெற நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.1410/2017/அ2)

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1204</u>**

அனுமதிக்கப்பட்டது.

3) இந்நகராட்சிக்குச் சொந்தமான (2018–2019 முதல் 2020–2021 முடிய மூன்றாண்டு குத்தகை இனங்களில்) பத்மனாபபுரம் அரண்மணையை பார்க்கவரும் சுற்றுலா பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2018–2019–ம் ஆண்டு அனுபவ உரிமைக்கு 23–02–2018–ம் அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம் கோரிய பொழுது கீழ்கண்ட இரு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். ஆனால் ஏலம் கோர முன் வரவில்லை.

கீழ்கண்ட இரு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கி உள்ளனர் அவைகளின் விபரம்.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்களின் பெயர் (ம) முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு.ற்றி.ஏசுதாசன்<br>த/பெ. தங்கையா<br>31/34 டி2, கோவில் விளை<br>சாரோடு, தக்கலை அஞ்சல்<br>கன்னியாகுமரி மாவட்டம் | 18,19,401/– |
| 2. | பி. சௌந்தரராஜன்<br>த/பெ/ பொன்னுபிள்ளை<br>3/57, புல்லுவிளை<br>பூக்கடை, திருவிதாங்கோடு | 17,70,101/– |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் வ.எண். 1–ல் காணும் ற்றி. ஏசுதாசன் என்பவர் உயர்ந்த பட்சமாக ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 1819401/– வழங்கியுள்ளார். கடந்த ஆண்டு ஏல தொகை ரூ. 1582088/– ஆகும். மேலும் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி ஏல தொகை ரூ.1507946/– ஆகும். திரு. ற்றி. ஏசுதாசன் என்பவர் வழங்கியுள்ள ஒப்பந்த தொகை சென்ற ஆண்டு ஏல தொகையை காட்டிலும் மற்றும் கடந்த மூன்று ஆண்டு சராசரி தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் அதனை ஏற்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

(ந.க.எண்.1981/2017/அ1)

<u>நகர் மன்ற தீர்மான எண். 1205</u>

ஒப்புதல் வழங்கப்பட்டது.

4) இந்நகராட்சிக்குச் சொந்தமான (2018–2019 முதல் 2020–2021 முடிய மூன்றாண்டு குத்தகை இனங்களில்) தக்கலை காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து போகும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2018–2019–ம் ஆண்டு அனுபவ உரிமைக்கு 23–02–2018–ம் அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம் கோரிய பொழுது கீழ்கண்ட இரு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோர முன் வரவில்லை.

கீழ்கண்ட இரு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கி உள்ளனர் அவைகளின் விபரம்.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்களின் பெயர் (ம) முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு.கே. பச்சைமால்<br>த/பெ. கொச்சப்பி<br>கரைகண்டார்கோணம்<br>தக்கலை. | 3,70,100/– |
| 2. | திரு.ற்றி.ஏசுதாசன்<br>த/பெ. தங்கையா<br>31/34 டி2, கோவில் விளை<br>சாரோடு, தக்கலை அஞ்சல்<br>கன்னியாகுமரி மாவட்டம் | 3,52,000/– |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் வ.எண். 1–ல் காணும் திரு.கே. பச்சைமால் என்பவர் உயர்ந்த பட்சமாக ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 370100/–க்கு அளித்துள்ளார். கடந்த ஆண்டு ஏல தொகை ரூ. 363825/– ஆகும். மேலும் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி ஏல தொகை ரூ.346775/– ஆகும். திரு. கே. பச்சைமால் என்பவர் வழங்கியுள்ள ஒப்பந்த தொகை சென்ற ஆண்டு ஏல தொகையை காட்டிலும் மற்றும் மூன்று ஆண்டு சராசரி தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் அதனை ஏற்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

(ந.க.எண்.1981/2017/அ1)

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1206</u>**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

5) இந்நகராட்சிக்குச் சொந்தமான (2018–2019 முதல் 2020–2021 முடிய மூன்றாண்டு குத்தகை இனங்களில் ) தக்கலை பேட்டை தினசரி சந்தையில் ஆணையர் குறிப்பிடும் இடத்தில் இரண்டு வாழை குலை உறைக்குழி அமைத்து குலை உறை போடுபவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2018–2019–ம் ஆண்டு அனுபவ உரிமைக்கு 23–02–2018–ம் அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நபர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வழங்கி உள்ளனர் அவைகளின் விபரம்.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கேட்டவரின் பெயர் (ம) முகவரி | ஏலக்கேள்வி தொகை | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.பி. கண்ணன்<br>த/பெ. பழனி<br>கீழ கல்குறிச்சி<br>பஞ்சாயத்து அலுவலகம் சமீபம்<br>தக்கலை | 220500/– | 231000/– |
| 2. | திரு. சி. நடராஜன்<br>த/பெ.செல்லதுரை<br>125 – ஆலுவிளை, பறைகோடு<br>முளகுமூடு அஞ்சல் | 171500/– | 210000/– |
| 3 | திரு. இ. ராஜரெத்தினம் த/பெ. செல்லையன் நாடார்<br>28/18பி2, கரைக்கண்டார் கோணம்<br>மணலி, தக்கலை | 221000/– | 161100/– |

மேற்படி மூன்று ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் வ.எண். 1–ல் காணும் திரு. பி. கண்ணன் என்பவர் உயர்ந்த பட்சமாக ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 231000/–க்கு அளித்துள்ளார். கடந்த ஆண்டு ஏல தொகை ரூ. 129544/– ஆகும். மேலும் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி ஏல தொகை ரூ.123473/– ஆகும். திரு. பி. கண்ணன் என்பவர் வழங்கியுள்ள ஒப்பந்த தொகை சென்ற ஆண்டு ஏல தொகையை காட்டிலும் மற்றும் மூன்று ஆண்டு சராசரி தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் அதனை ஏற்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

(ந.க.எண்.1981/2017/அ1)

<u>நகர் மன்ற தீர்மான எண். 1207</u>

ஒப்புதல் வழங்கப்பட்டது.

6) சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ் கீழ்கண்ட நான்கு பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். ஆ3/5758/2016, நாள் 01–02–2018–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினைச் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணி விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பத்மனாபபுரம் நகராட்சி 20–வது வார்டு அரசு தொடக்கப் பள்ளிக்கு அருகே ரகுராமன் வீட்டருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டாருடன் சிறு மின் விசை திட்டம் அமைத்தல். | 2.10 |
| 2. | பத்மனாபபுரம் நகராட்சி 11–வது வார்டு முல்லை நகரில் ஓட்டுநர் கணேசன் வீட்டு அருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டாருடன் சிறுமின் விசை திட்டம் அமைத்தல். | 2.40 |
| 3. | பத்மனாபபுரம் நகராட்சி 21–வது வார்டு மேலாங்கோடு சாலை ஓரமாக ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டாருடன் சிறுமின் விசை திட்டம் அமைத்தல். | 2.00 |
| 4. | பத்மனாபபுரம் நகராட்சி 10–வது வார்டு மெக்காபாளையம் மும்தாஜ் வீட்டின் அருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டாருடன் சிறுமின் விசை திட்டம் அமைத்தல். | 2.00 |

(ந.க.எண். 1716/2017/இ1)

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1208</u>**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

7) இயக்குநர் , தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்பத்தூர் அவர்களின் 01–02–2018–ம் தேதிய கடிதம் ந.க.எண்.359/2017/அ2–ல் ஆண்டு சந்தா 2010–11 மற்றும் 2012–13 முதல் 2016–17 முடிய ரூ.1,12,000/–செலுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். 2016–17 மற்றும் 2017–18–ம் ஆண்டுகளுக்கான சந்தாத் தொகை ரூ.40,000/–ஐ பயிற்சி நிறுவனத்திற்கு வழங்க இந்நகர் மன்றம் தனது 28–07–2017–ம் தேதிய 1093–வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. எனவே மீதமுள்ள ஆண்டுகளான 2010–2011 மற்றும் 2012–2013 முதல் மற்றும் 2014–2015 வரையிலான ஆண்டுகளுக்குரிய சந்தா ரூ.72,000/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1988/2017/சி1)

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1209</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

8)பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒகிபுயல் பாதிப்பு காரணமாக இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் தெருவிளக்குகள் பழுதான காரணத்தினால் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட உதிரி பாகங்கள் தேவைப்படுகிறது.

| வ.எண். | தேவைப்படும் உதிரிபாகங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 20 W LED Tube light fitting set | 30 Nos |
| 2. | Suitable bend pipe for LED Tube light fittings | 30 Nos |
| 3. | Suitable clamp set for different EB pole set | 30 Nos |
| 4. | 1/18 VIR Wire Coil | 3 Nos |

மேற்கண்ட உதிரிபாகங்கள் வாங்குவதற்கும், அதற்காகும் செலவுத் தொகையினை ஒகி புயல் நிவாரண நிதியாக இந்நகராட்சிக்கு வரப்பெற்ற தொகை ரூ.2,00,000/–ல் உள்ள சேமிப்புத் தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும் அவசர அவசியம் கருதி மேற்காணும் பொருட்கள் வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.2064/2017/இ1)

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1210</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

9)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முல்லை நகரில் ஓட்டுநர் கணேசன் வீட்டு அருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டாருடன் சிறுமின் விசை திட்டம் அமைக்கும் பணியை ரூ.2,40,000/– மதிப்பீட்டில் செய்வதற்கு 23–02–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டினை விட | |
|---|---|---|---|
| | | அதிகம் (சதவீதம்) | குறைவு (சதவீதம்) |
| 1. | திரு. என். ஜான் ஜஸ்டஸ் | 0.56 | – |
| 2. | திரு. வி. ராஜேந்திரன் | – | –0.06 |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. வி. ராஜேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 1716/2017/இ1)

<u>நகர் மன்ற தீர்மான எண். 1211</u>

அனுமதி வழங்கப்பட்டது.

10)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 அரசு தொடக்கப் பள்ளிக்கு அருகே ரகுராமன் வீட்டருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டாருடன் சிறுமின் விசை திட்டம் அமைக்கும் பணியை ரூ.210000/– மதிப்பீட்டில் செய்வதற்கு 23–02–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டினை விட | |
|---|---|---|---|
| | | அதிகம் (சதவீதம்) | குறைவு (சதவீதம்) |
| 1. | திரு. ற்றி. ராமசாமி | – 0.06 | – |
| 2. | திரு. என். ஜான் ஜஸ்டஸ் | – | 0.90 |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ற்றி.ராமசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 1716/2017/இ1)

<u>நகர் மன்ற தீர்மான எண். 1212</u>

அனுமதி வழங்கப்பட்டது.

11)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 மெக்காபாளையம் மும்தாஜ் வீட்டின் அருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டாருடன் சிறுமின் விசை திட்டம் அமைக்கும் பணியை ரூ.3,00,000/– மதிப்பீட்டில் செய்வதற்கு 23–02–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டினை விட | |
|---|---|---|---|
| | | அதிகம் (சதவீதம்) | குறைவு (சதவீதம்) |
| 1. | திரு. என். ஜான் ஜஸ்டஸ் | – | 0.58 |
| 2. | திரு. வி. ராஜேந்திரன் | –0.05 | – |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. வி. ராஜேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 1716/2017/இ1)

<u>நகர் மன்ற தீர்மான எண். 1213</u>

அனுமதி வழங்கப்பட்டது.

12)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 மேலாங்கோடு சாலை ஓரமாக ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டாருடன் சிறுமின் விசை திட்டம் அமைக்கும் பணியை ரூ.2,00,000/– மதிப்பீட்டில் செய்வதற்கு 23–02–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டினை விட | |
|---|---|---|---|
| | | அதிகம் (சதவீதம்) | குறைவு (சதவீதம்) |
| 1. | திரு. என். ஜான் ஜஸ்டஸ் | –0.06 | – |
| 2. | திரு. வி. ராஜேந்திரன் | – | 0.57 |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஜான்ஜஸ்டஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 1716/2017/இ1)

<u>நகர் மன்ற தீர்மான எண். 1214</u>

அனுமதி வழங்கப்பட்டது.

13) இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார வாகனம் எண். ற்றி.என்.74பி 4577–க்கு புதிய மின்கலப்பெட்டி வாங்குவதற்கு 26–02–2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Exide Authorised dealer, Thuckalay | 4750/– |
| 2. | Moti Battery&Auto electrical works Marthandam | 4950/– |

மேலே குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண். 1–ல் உள்ள Exide Authorised dealers Thuckalay நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளி அளித்த Exide Authorised dealers Thuckalay நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றும் அவசர அவசியம் கருதி விநியோகம் உத்திரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(எ2/1410/2017)

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1215</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

14)இந்நகராட்சிப் பகுதியில் ஜீலை 2017–ம் மாதம் முதல் தொடர்ந்து டெங்கு காய்ச்சல் தாக்கம் அதிகமாக இருந்ததால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் 14–06–2016–ம் தேதிய ந.க.எண். அ2/194/2016 எண் செயல்முறை ஆணையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு கொசுக்களால் பரவுவதை தடுக்கவும் மற்றும் டெங்கு நோய்கள் வராமல் தடுக்கும் பொருட்டும் வீடு வீடாக சென்று கண்காணிக்கவும் கொசுக்களின் வாழ்வாதாரங்களை அழிக்கவும் 20 தினக்கூலி பணியாளர்களை நகர் மன்ற தீர்மானம் எண். 1097, நாள் 28–07–2017–ன் படி 01–08–2017 முதல் 89 நாட்களுக்கு நியமனம் செய்து வந்தனர். அவர்களை 01–11–2017 முதல் மேலும் 89 நாட்களுக்கு தொடர்ந்து பணியில் வைத்துக் கொண்டதற்கு மன்றத்தின் அனுமதியும் , அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் எ1/12577/2016–ன் படி நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.360/– வீதம் தினகூலியாக வழங்கவும் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1216</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

15)தமிழக அரசின் ஓராண்டு சாதனைகளை தினமணி நாளிதழில் தொழில்மலர் என்னும் சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் 20–09–2017–ம் தேதிய கடித எண்.306/செ.ம.தொ.அ/2017 மூலம் அறிவுரை வழங்கப்பட்டதின் அடிப்படையில் இந்நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் விவரங்களை மேற்படி தினமணி தொழில் மலரில் விளம்பரம் செய்த வகையில் தினமணி நிறுவனத்திற்கு ரூ.9975/– நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.861/2017/இ1)

**நகர் மன்ற தீர்மான எண். 1217**

அனுமதிக்கப்பட்டது.

16)இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளரின் அறிக்கையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கதவு எண். 24/1 எண் கொண்ட கட்டிடம் குடியிருப்பு பயன்பாட்டில் உள்ளதால் மேற்படி கதவு எண் உள்ள குடிநீர் இணைப்பு எண்.2147– ஐ வீட்டு உபயோக அல்லாத இணைப்பிலிருந்து வீட்டு குடிநீர் இணைப்பாக மாற்றம் செய்து வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் குடிநீர் இணைப்பு உள்ள பகுதி வார்டு எண்.6–க்கு பதிலாக வார்டு எண்.7 என தவறுதலாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி இடத்தில் உள்ள குடிநீர் இணைப்பு வரிவிதிப்பு ரசீதில் வார்டு எண்.6 என திருத்தம் செய்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 24/2018/இ1)

**நகர் மன்ற தீர்மான எண். 1218**

அனுமதிக்கப்பட்டது.

17) பத்மனாபபுரம் நகராட்சி வருவாய் நிதி 2017–18–ன் கீழ் எம்.ஜி.ஆர். கலையரங்கம் அருகில் கட்டப்பட்ட சமுதாய கூடத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளும் பணியை ரூ.150000/– மதிப்பீட்டில் செய்வதற்கு 28–02–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டினை விட | |
|---|---|---|---|
| | | குறைவு (சதவீதம் ) | அதிகம் (சதவீதம் |
| 1 | திரு. ஆஸ்டின் கில்லாரி | – | 0.91 |
| 2 | திரு. சி. ஜெகஸ்லால் | –0.03 | – |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.03 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. ஜெகஸ்லால் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.98/2018/இ1)

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1219</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

18) பத்மனாபபுரம் நகராட்சி வருவாய் நிதி 2017–18–ன் கீழ் வார்டு எண். 13 கொல்லக்குடி முக்கு சுகாதார வளாகத்தில் தண்ணீர் வசநதி (பெயிண்டிங் ) வண்ணம் பூசுதல், பிளம்பிங் போன்ற கூடுதல் பணிகள் மேற்கொள்ளும் பணியை ரூ.175000/– மதிப்பீட்டில் செய்வதற்கு 28–02–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டினை விட | |
|---|---|---|---|
| | | குறைவு (சதவீதம் ) | அதிகம் (சதவீதம் |
| 1 | திரு. சி. ஜெகஸ்லால் | – 0.01 | – |
| 2 | திரு. ஆஸ்டின் கில்லாரி | – | 1.79 |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட –0.01 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. ஜெகஸ்லால் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.98/2018/இ1)

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1220</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

19) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் முகாம் மனு எண்.167789/0226, நாள் 26–02–2018–ன் படி பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதிக்குட்பட்ட சரல்விளை சாலை அருகே உள்ள ஞாறக்குழிகுளம் கரையின் சுவர் இடிந்து மிகவும் மோசமான நிலையில் பொது மக்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலையில் உள்ளது. மேற்படி சாலை அருகே உள்ள ஞாறக்குழி குளம் கரையின் சுவர் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.1,00,000/– தயார் செய்யப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அதற்கான ஆகும் செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1221</u>**

அனுமதிக்கப்பட்டது.

20) பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட இரணியல் பகுதியில் SUS மண்டபம் அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மின் மோட்டார் பழுதடைந்துள்ளது தற்போது ஆழ்துளை கிணறு 50 அடி வரை தூர்ந்துபோய் உள்ளதால் அவ்விடத்திலேயே ஒரு புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மினி பவர் பம்ப் அமைக்க ரூ.3,00,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத் தொகையை இந்நகராட்சி குடிநீர் விநியோக நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 370/2018/இ1)

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1222</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

21)பத்மனாபபுரம் நகராட்சிக்கு சொந்தமான பேலஸ் ரோட்டில் அமைந்துள்ள அலுவலக கட்டிடம் கல்குளம் கிராமம் புல எண். பி5–37–ல் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள மதில் சுவர் சுமார் 15.2 மீ நீளத்திற்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் அதனை அப்புறப்படுத்தி பாதை அகலப்படுத்த கேட்டு திரு. சுப்பையாபிள்ளை மற்றும் D.J. தோமஸ் ராஜ் என்பவர்கள் O.S.No. 4/2012-ன் படி நகராட்சி மீது பத்மனாபபுரம் மாவட்ட கூடுதல் முன்சிப் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து நடைப்பெற்று தற்போது வழக்கு முடிந்து O.S.No. 4/2012 தீர்ப்பு நகல் நகராட்சிக்கு சாதகமாக பெறப்பட்டுள்ளது. எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ.6000 (Part) நகர் மன்றத் தீர்மானம் எண்.52, நாள் 31–01–2012–ன் படி வழங்கப்பட்டது. அது போக மீதி தொகை ரூ.13500/–ஐ வழக்கறிஞர் திரு. டென்னிசன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 2561/2007/ந.அ.ஆ)

**<u>நகர் மன்ற தீர்மான எண். 1223</u>**

அனுமதிக்கப்பட்டது.

22) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்புத்தூள் விநியோகம் செய்வதற்கு 09–03–2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது அவைகளின் விபரம்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை<br>ரூ. (கிலோ ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1. | Dilas Export & Imports Trading<br>Nagercoil | 8.90 |
| 2. | Jayapaba Traders<br>Nagercoil | 9.80 |

மேலே வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண். 1–ல் கண்ட Dilas Export & Imports Trading,Nagercoil அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மேற்படி நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 973/2015/அ2)

**நகர் மன்ற தீர்மான எண். 1224**

அனுமதி வழங்கப்பட்டது.

23) இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகனம் எண். TN75P 9346-க்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் வேக கட்டுப்பாடு கருவி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.10000/– மேற்படி செலவு தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1256/2013/அ2)

**நகர் மன்ற தீர்மான எண். 1225**

அனுமதிக்கப்பட்டது.

24)இந்நகராட்சி கணனி பிரிவில் UPS பழுது (5 KVA இயந்திரம்)பணிகள் மேற்கொள்ள 09–03–2018ம் தேதியில் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் பின்வருமாறு:–

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Frontline Systems & Service Chennai | 8000 + GST-18% ரூ.9440/– |
| 2. | Protontechnologies Chennai | Rs. 9800/- (GST 18%) |
| 3. | Kasi Power systems and services Power Chennai | Rs. 9200/- (GST 18%) |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் காணும் Front line systems & service நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று கணனி பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 225/2018/இ1)

**நகர் மன்ற தீர்மான எண். 1226**

அனுமதி வழங்கப்பட்டது.

25) இந்நகராட்சிக்குச் சொந்தமான (2018–2019 முதல் 2020–2021) முடிய மூன்றாண்டு குத்தகை இனங்களில் உதயகிரி கோட்டையை சுற்றி பார்க்க வரும் சுற்றுலா பயணிகளின் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2018–2019–ம் ஆண்டு அனுபவ உரிமைக்கு 14–03–2018–ம் தேதி அன்று மறு ஏலம் /மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர்.

| வ.எண். | ஏலம்/ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்களின் பெயர் விபரம் | அதிகபட்சமான ஏலக்கேள்வி தொகை ரூ. | அளித்துள்ள ஒப்ந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.டி.ஜான்றோஸ் த/பெ.டேவிட் 13–36 இராமன்பறம்பு தக்கலை | 33000/– | 60000/– |
| 2. | திரு. சி. இராஜரெத்தினம் த/பெ. செல்லையன்நாடார் 28/18கி2, கரைக்கண்டார்கோணம் மணலி, தக்கலை | 32000/– | 81100/– |
| 3. | திரு. பெஞ்சமின் பிராங்கிளின் த/பெ. தங்கையா 31–27 கோவில் விளை சாரோடு, தக்கலை | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை | 41000/– |
| 4. | திரு. சி. மகேஷ் த/பெ. சின்னப்பா கோவில்விளை, சாரோடு, தக்கலை | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை | 24000/– |

மேற்படி வரப்பெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் வ.எண். 2–ல் காணும் திரு. சி. இராஜரெத்தினம் என்பவர் உயர்ந்த பட்சமாக ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.81100/– வழங்கியுள்ளார். கடந்த ஆண்டு குத்தகை தொகை ரூ.24255/– ஆகும். மேலும் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி குத்தகை ரூ.23118/– ஆகும். திரு. சி. இராஜரெத்தினம் என்பவர் ஒப்படைத்துள்ள ஒப்பந்த தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகையை காட்டிலும் மற்றும் கடந்த மூன்று ஆண்டு சராசரி தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் அதனை ஏற்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி உடன் குத்தகை தொகை செலுத்த கேட்டு அறிவிப்பு அனுப்பி நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1981/2017/அ1)

<u>நகர் மன்ற தீர்மான எண். 1227</u>

ஒப்புதல் வழங்கப்பட்டது.

26) இந்நகராட்சிக்கு தேவையான CFC ரசீதுகள் உடனடியாக தேவைப்படுவதால் 15000 எண்ணம் ரசீதுகள் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகத்தில் இருந்து அச்சடித்து வாங்குவதற்கும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.65000/–க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். 25/2018/இ2)

<u>நகர் மன்ற தீர்மான எண். 1228</u>

அனுமதி வழங்கப்பட்டது.

27)இந்நகராட்சி உபயோகத்திற்கு 2017–18–ம் ஆண்டு மார்ச் மாதம் முடிய தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள் மற்றும் ரசீதுகள் விநியோகம் செய்வதற்கு 16–2–2018 அன்று அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகங்களில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்காணும் விவரப்படி 3 நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | கூட்டுறவு அச்சகத்தின் பெயர் மற்றும் முகவரி | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | The Chidambaranar District<br>Printers service Indl.,<br>Co-op society Ltd., Ind No. 1872<br>28E, Muthananthapuram<br>Ist street, Kovilpatti | 1,75,700/–<br>GST 18% extra |
| 2. | The Melagaram Printing worker<br>Ind., Co-op Society Ltd., Ind No. 923<br>Thenkasi | 1,86,690/–<br>GST 18% extra |
| 3. | The Chidambaranar Labour contract service Ind,<br>Co-o Society Ltd, 18A/23 , Palayamkottai Road<br>Thoothukudi-2 | 1,80,690/–<br>GST 18% extra |

மேற்காணும் 3 ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1–ல் கண்ட சிதம்பரனார் மாவட்ட கூட்டுறவு அச்சகம், கோவில்பட்டி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், அதனை ஏற்று சப்ளை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 25/2018/இ2)

**நகர் மன்ற தீர்மான எண். 1229**

அனுமதி வழங்கப்பட்டது.

28) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமி நாசினி பொருள்களான நீர்த்த சுண்ணாம்பு (ம) பிளிச்சிங் பவுடர் வாங்குவதற்கு 09–03–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன அவைகளின் விபரம்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | நீர்த்த சுண்ணாம்பு (கிலோ ஒன்றிற்கு) ரூ. | பிளீச்சிங்பவுடர் (கிலோ ஒன்றிற்கு) ரூ. |
|---|---|---|---|
| 1. | பாரத் பெஸ்டிசைட்ஸ்<br>கோயம்புத்தூர் | 10.25 | 34/– |
| 2. | SKY & Co<br>நாகர்கோவில் | 9 | 32/– |

மேலும் அதே நாளில் நடைபெற்ற நீர்த்த சுண்ணாம்புக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் Dilar Export & Imports Treeding Nagercoil நிறுவனத்திடமிருந்து ஒரு கிலோ நீர்த்த சுண்ணாம்பு ரூ.8.90 என்ற விலை விகிதத்தில் விலைப்புள்ளி வரப்பட்டுள்ளது. அதன்படி SKY & Co நிறுவனத்தாரும் ரூ.8.90–க்கு நீர்த்த சுண்ணாம்பு தூள் விநியோகம் செய்ய இசைவு தெரிவித்துள்ளார் (Nogotiation) அதன்படி Sky& co நாகர்கோவில் நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 1810/2017/அ2)

**நகர் மன்ற தீர்மான எண். 1230**

அனுமதி வழங்கப்பட்டது.

29) பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட தக்கலை செய்கு பீர்முகம்மது ஒலியுல்லாஹ் (ரலி) பள்ளி திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு சாலையோர தரைவாடகைக்கான ஏலம் நாள் 20–03–2018–ல் நடைபெற்றது அதில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | பெயர் | ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு. ரிஸ்வான்சுலைமான் | 25300/– |
| 2. | திரு. பி.எம். அப்துல்காதர் | 25100/– |
| 3. | ஹல்லாஜ் என்.எஸ்.எஸ். தாஜிதீன் | 25000/– |

மேற்கண்டவற்றில் வரிசை எண்.1 –ல் காணும் உயர்ந்த பட்ச ஏலதொகை ரூ.25,300/– கடந்த ஆண்டு ஏலதொகை ரூ.16,300/–ஐ விடவும் ரூ.9,000/– கூடுதலாக உள்ளது. எனவே உயர்ந்த பட்ச தொகையாக ரூ.25,300/–க்கு ஏலம் கோரியுள்ள திரு.ரிஸ்வான் சுலைமான் என்பவரின் ஏலத் தொகையை ஒப்புக் கொள்ள நகர் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 762/2010/அ2)

**நகர் மன்ற தீர்மான எண். 1231**

அனுமதி வழங்கப்பட்டது.

30) இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்று ஆண்டு குத்தகை இனங்களில் தக்கலை பேட்டை தினசரி சந்தையில் விற்பனைக்காக கொண்டு வரப்படும் தலைசுமை சாமான்கள் வண்டிகள் லாறிகள் முதலியவைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு.

1) பொறுப்புத் தொகை – ரூ. 10,00,000/–
2) வங்கி உத்திரவாதசான்று – ரூ. 50,00,000/–
3) வங்கி உத்திரவாதசான்று கொடுக்க இயலாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை – ரூ.25,00,000/–
4) மின் இணைப்புக்கான வைப்புத் தொகை மற்றும் இதர வைப்புத் தொகை ரூ. 1,00,000/– என நிர்ணயம் செய்து நகர் மன்றத் தீர்மானம் எண்.1196, நாள் 30–01–2018–ல் ஒப்புதல் பெறப்பட்டு 23–02–2018 அன்று முதல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 14–03–2018 அன்று இரண்டாவதாக மறு ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர முன் வரவில்லை.

எனவே மேற்படி தக்கலை பேட்டை தினசரி சந்தையில் விற்பனைக்காக கொண்டு வரப்படும் தலைசுமை சாமான்கள் வண்டிகள் லாறிகள் முதலியவைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு.

| | | |
|---|---|---|
| 1, | பொறுப்புத் தொகை | ரூ.10,00,000/– |
| 2. | வங்கி உத்திரவாத சான்று | ரூ.30,00,000/– |
| 3. | வங்கி உத்திரவாத சான்று கொடுக்க இயலாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை | ரூ.15,00,000/– |
| 4. | மின் இணைப்புக்கான வைப்புத் தொகை மற்றும் இதர வகைகளுக்கான வைப்புத் தொகை | ரூ.1,00,000/– |

என குறைத்து நிர்ணயம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது. 31–03–2018–ம் நாளுக்கு குறைந்த நாட்களே உள்ளதால், அவசர அவசியம் கருதி கூடுதல் வைப்புத் தொகையினை குறைவு செய்து மூன்றாவது மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நாளிதழில் பிரசுரம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். 1981/2017/அ1)

<u>நகர் மன்ற தீர்மான எண். 1232</u>

அனுமதி வழங்கப்பட்டது.

31) 2017 ஒகி புயல் காரணமாக பத்மனாபபுரம் நகராட்சி பகுதியில் சாலைகள் சேதமடைந்தும், மரங்கள் வேரோடு சாய்ந்தும், போக்குவரத்து பாதிப்பினையும் , அரசு (ம) தனியார் கட்டிடங்கள் மீது விழுந்தும் மிகுந்த சேதத்தை ஏற்படுத்தியதில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் உத்திரவின்படி பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் நிவாரணங்களை மேற்கொள்ள அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் நகராட்சிகளில் இருந்து துப்புரவு பணியாளர்கள் , ஓட்டுனர்கள் (ம) மேற்பார்வையாளர்களும் இந்நகராட்சிக்கு வருகை தந்தனர். மேலும் துணை இயக்குநர், சுகாதார பணிகள் அவர்களின் உத்தரவின் பேரில் மருத்துவ குழுக்கள் மூலமாகவும் நிவாரண பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிவாரண பணிக்காக ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்களை ஸ்ரீலெட்சுமி மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டதற்கு வாடகை ரூ.17,500/– வழங்கிய வகைக்கும், ஓகி புயலால் மரங்கள் சாலையில் விழுந்து கிடந்ததை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு வெட்டுக்கத்தி வாங்கிய வகையில் ஆன செலவுத் தொகை ரூ.4800/–க்கும் ஆக மொத்தம் ரூ.22300/– இவ்வலுவலக துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. மோகன் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. எனவே மேற்காணும் தொகையினை இந்நகராட்சி துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு.மோகன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண். 1984/2017/இ1)

<u>நகர் மன்ற தீர்மான எண். 1233</u>

அனுமதிக்கப்பட்டது.

32)ஒகி புயல் நிவாரண நிதியின் கீழ் வரப்பெற்ற தொகையில் உள்ள சேமிப்பு நிதியில் இந்நகராட்சிக்கு 20W 4Feet LED street light fitting விநியோகம் செய்ய 21–03–2018 அன்று பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | 20W 4Feet LED street light மற்றும் அதனை சார்ந்துள்ள பொருள்கள் | JIES Electricals<br>Trinity complex<br>Main Road | மதிப்பீட்டினை விட (−)0.50% குறைவு |
| 2. | “ | J. Electricals<br>220 அவ்வை சண்முக சாலை ,மீனாட்சிபுரம்<br>நாகர்கோவில் | மதிப்பீட்டினை விட (+)0.50% அதிகம். |

மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. JIES Electricals நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை (மதிப்பீட்டினை விட 0.50% குறைவு) ஏற்று விநியோகம் உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு விநியோக உத்திரவு வழங்க நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர் மன்ற தீர்மான எண். 1234**

அனுமதி வழங்கப்பட்டது.

33) நகராட்சி பொது நிதியின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட சரல்விளை சாலை அருகே ஞாறக்குழிகுளம் கரையின் பக்கவாட்டு சுவர் கட்டும் பணியை ரூ.1,00,000/− மதிப்பீட்டில் செய்வதற்கு 21−03−2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரரின் பெயர் முகவரி | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | பத்மனாபபுரம் நகராட்சி சரல்விளை சாலை அருகே ஞாறக்குழிகுளம் கரையின் பக்கவாட்டு சுவர் கட்டும் பணிகள் மேற்கொள்ளுதல். | C. Stalin<br>Kanjikuzhi | மதிப்பீட்டினை விட (−)0.11% குறைவு |
| | | G. Sundar Raj<br>Palliyadi P.O. | மதிப்பீட்டினை விட (−)0.08% குறைவு |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மிகவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள (மதிப்பீட்டினை விட −0.11 சதவீதம் குறைவு) திரு. C. Stalin என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி மிகவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தக்காரருக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். 371/2018/இ1)

**நகர் மன்ற தீர்மான எண். 1235**

அனுமதி வழங்கப்பட்டது.

34) நகராட்சி பொது நிதியின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 APMA 2-ம் தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணியை ரூ.85000/− மதிப்பீட்டில் செய்வதற்கு 23−03−2018 அன்று பெறப்பட்ட மறு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரரின் பெயர் முகவரி | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | பத்மனாபபுரம் நகராட்சி வார்டு எண்.6 APMA தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | சி. ஸ்டாலின்<br>கஞ்சிக்குழி<br>கஞ்சிக்குழி அஞ்சல் | மதிப்பீட்டை விட (–0.03%) குறைவு |
| | ‘‘ | ஜி. சுந்தர்ராஜ்<br>பள்ளியாடி<br>பள்ளியாடி அஞ்சல் | மதிப்பீட்டை விட 0.03%) அதிகம். |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள (மதிப்பீட்டினை விட0.03%குறைவு) திரு. ஸ்டாலின் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. ஸ்டாலின் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். 1/2018/இ1)

<u>**நகர் மன்ற தீர்மான எண். 1236**</u>

அனுமதி வழங்கப்பட்டது.

ஒப்பம்/–(தே. கிருஷ்ணமூர்த்தி)
தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.